அரசாங்க நிருவாக சுற்றறிக்கை இல: 02/99

எனது இல: 1X543ஈ/1272/30/111
அரசாங்க, நிருவாக, உள்நாட்டலுவல்கள்,
பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு.
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு–07.
1999 பெப்ரவரி மாதம். ஆந் திகதி.

எல்லா அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும்,
மாகாணசபைகளின் தலைமைச் செயலாளர்களுக்கும்,
திணைக்களத் தலைவர்களுக்கும்.,

## நடமாடும் தொலைபேசிகளை வழங்கல்

நடமாடும் தொலைபேசிகளை வழங்கள் தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள 1997.08.25ம் திகதிய 19/97ம் இலக்க 1997.12.31ம் திகதிய 19/97(1)ம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளை இத்தால் இரத்துச் செய்வதுடன் அது தொடர்பில் இச் சுற்றறிக்கை வெளியிடப்படுகின்றது.

02. பின்வரும் நிபந்தனைகளின் பிரகாரம் அமைச்சரவை அமைச்சுக்களின் செயலாளர்களுக்கு மட்டுமென்ற வரையறையின் கீழ் நடமாடும் தொலைபேசிகள் வழங்குவதை அரசு அங்கீகரித்துள்ளது.

(I) அரச கடமையின் நிமித்தம் மட்டும் நடமாடும் தொலைபேசிகளை கோருதல் வேண்டும்.

(II) மாதாந்த வெளி அழைப்புகள் 2000/–ரூபா என்ற வரையறையின் கீழ் இருக்க வேண்டியதுடன், தொலைபேசி அழைப்புக்கட்டணங்களின் 10% உத்தியோகத்தரிடமிருந்தும் அறவிடவேண்டும். அதற்கு மேற்படும் மாதாந்த வெளி அழைப்புகளுக்கான முழுமொத்தக் கட்டணங்களையும் உத்தியோகத்தர் செலுத்த வேண்டும்.

(III) வெளியில் இருந்து கிடைக்கும் அழைப்புக் கட்டணங்கள் அனுமதிப்பத்திரக் கட்டணங்கள், பொருட்கள் மற்றும் சேவைவரிகள் முதலிய செலவுகள் அமைச்சு/திணைக்களத்தினால் செய்யப்பட வேண்டும்.

(iv) நடமாடும் தொலைபேசி இணைப்புகள், சேவைகள் என்பவற்றிற்கான செலவுகள் யாவும் அந்தந்த அமைச்சுக்களின்/திணைக்களங்களின் நிதி ஒதுக்கீடுகளின் மூலம் செய்ய வேண்டும்.

03. இதற்கு அமைவாக சம்பந்தப்பட்ட நிதி ஒழுங்குகளை திருத்துவதற்கு பொதுத் திறைசேரி நடவடிக்கை எடுக்கும்.

04. எவரேனும் உத்தியோகத்தருக்கு நடமாடும் தொலைபேசி வேண்டுமாயின் அதற்கான காரணத்துடன் தனது நேர்வரிசை அமைச்சின் செயலாளருக்கு விண்ணப்பிக்க வேண்டுமென்பதுடன் அதை பரிசீலனை செய்து மிக அவசியமென விதிப்புரை செய்யுமிடத்து மட்டும் அவ்விண்ணப்பத்தை சம்பந்தப்பட்ட செயலாளர் தாபனப் பணிப்பாளர் நாயகத்துக்கு சமர்ப்பிக்க வேண்டும்.

05. தாபனப் பணிப்பாளர் நாயகம் அவ்வேண்டுகோளை அரசினால் நியமிக்கப்பட்டுள்ள பின்வரும் உத்தியோகத்தர்களை கொண்ட குழுவுக்கு சமர்ப்பித்து அதுபற்றிய முடிவொன்றை எடுப்பதற்குரிய நடவடிக்கை எடுப்பார்.

1. அரசாங்க நிர்வாக, உள்நாட்டலுவல்கள், பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சின் செயலாளர்.
2. நிதி திட்டமிடல்அமைச்சின் செயலாளர்.
3. தபால் தொலைத் தொடர்பு, தொடர்பு சாதன அமைச்சின் செயலாளர்.

06. திறைசேரியின் ஒத்திசைவுடன் இச் சுற்றறிக்கை வெளியிடப்படுகின்றது.

ஒப்பம்/பீ.ஏ.சேனாரட்ன
செயலாளர்
அரசாங்க நிருவாக, உள்நாட்டலுவல்கள்,
பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு.

nada/4